**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.86/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராஜேந்திரன் | Prosecution | LW-2 as PW2 |
| Father Name | ராமலிங்கம் | Defence | |
| Village | வைத்தீஸ்வரன்கோயில் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 52/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**19.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 நாகவள்ளியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு விபத்து நடந்த போது நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். கடந்த 24.10.2021 ம் தேதி இரவு 10.00 மணிக்கு நான் வேலையை முடித்துவிட்டு சீர்காழியில் இருந்து வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கிழக்கே அன்னபூர்ணா ஹோட்டல் அருகில் உள்ள ஸ்பீடு பிரேக்கில் ஆஜர் எதிரி TN 50L5038 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா டோஸ்ட் என்ற நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் திருப்பினார் என்றாலும் அப்போது வாகனத்தின் பின் பக்கத்தில் உட்கார்ந்து வந்த தினேஷ் தடுமாறி கீழே விழுந்து தலையில் அடிபட்டு விட்டார் என்றாலும் சரியல்ல. மேற்படி காயம்பட்ட

தினேஷ் என்பவரை நான் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**